Registered as a NewsPaper

விலைரூபா-07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –23 | 05–04–2004 | திங்கட்கிழமை | ஓசை –047




# பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமர்

# சனாதிபதி முன் இன்று பதவி ஏற்பார்

## சனாதிபதி தரப்பிலிருந்து தகவல்

**சிறிலங்காவில் புதிய அரசாங்கத்தை அமைக்கவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமராக சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று சனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இதனை சனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தாத போதும் சனாதிபதித் தரப்பு இதில் மாற்றம் எதுவும் இருக்காது எனவும் தெரிவித்துள்ளது.

இதற்கு சுதந்திரக்கட்சியுடன் கூட்டணிஅமைத்துள்ள ஜே.வி.பியும் உடன்பாடு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. இன் நியமனம் குறித்து முழுஅளவிலான திருப்தி கொள்ளாத போதும் சனாதிபதி சந்திரிகா இவ்விடயத்தில் காட்டிய தீவிர அக்கறை காரணமாக கதிர்காமரின் நியமனத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்பு வழங்குவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இத்தகவலை நேற்று ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

## ஜே.வி.பி.க்கு 36 ஆசனங்கள் மூவர் மட்டுமே தோல்வி

இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிட்ட 39 ஜே.வி.பி. வேட்பாளர்களில் 36 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.இந்நிலை புதிதாக அமையப்போகும் அரசில் அவர்களின் செல்வாக்கை அதிகரித்துள்ளதுடன் அவர்கள் எடுக்கப்போகும் தீர்மானங்களும் எதிர்காலத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜே.வி.பி. வேட்பாளர் நால்வர் விருப்பு வாக்கில் முன்னணியில்

(கொழும்பு)

நடந்து முடிந்த சிறிலங்காவின் 13வது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணி சார்பில் அதிகூடி விருப்பு வாக்களை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த விமல் வீரவன்ச பெற்றுள்ளார். அவர் பெற்ற வாக்குகள் 231185.

இது இவ்வாறிருக்க கொழும்பு மாவட்டத்தில் மேலும் இரு ஜே.வி.பி.வேட்பாளர்கள் விருபபு வாககுகலளைப் பெற்று இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றனர். இவர்களுக்கு அடுத்தபடியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுசில் பிரேம ஜெயந்த 174000, தினேஸ் குணவர்த்தன 82626 அர்ஜுன ரணதுங்க 81934ஜீவன் குமாரதுங்க 51585 ஏ.எச்.எம்.பௌசி 49719 விருப்புவாக்குகளைப்பெற்றனர். இதேவேளை ஹம்பகா மாவட்டத்தில் சுதந்திரக்கட்சியின் அநுராபண்டாரநாயக்கவை விட ஜே.வி.பி.யின் விஜித்த கேரத் அதிகளவு விருப்புவாக்குகளைப் பெற்றுள்ளார்.

## கருணாசேனகொடித்துவக்கு தேர்தலில் தோல்வி

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் கருணா சேன கொடித்துவக்கு தோல்வியடைந்துள்ளார்.

அதேவேளை கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே. கட்சி சார் பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில் ஆறாவது இடத்தில் தி.மகேஸ்வரன் இடம்பெற்றுள்ளார்.

## தேர்தலில் தமிழ்மக்கள் ஆற்றிய வரலாற்றுப் பணி மகத்தானது!

### ஆதரவு வழங்கிய மக்களுக்குப் புலிகள் புகழாரம்

(கிளிநொச்சி)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து, பெரும் தியாகங்கள் புரிந்து, பெரும் இராணுவ வெற்றிகளைக் குவித்து, தீர்க்கமான வரலாற்றுக் கட்டத்தை அடைந்துள்ள எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் அதனைத் தலைமை தாங்கி முன்னெடுத்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நடைபெற்ற தேர்தலில் (ஏப்ரல் 02, 2004) தமிழ் மக்கள் தமது தார்மீக ஆதரவை மீள உறுதிப்படுத்தி,எமது போராட்ட முன்னெடுப்புக்களுக்கு தமது ஒட்டு மொத்த ஆணையை வழங்கி, ஆற்றிய வரலாற்றுப் பணி மகத்தானது என விடுதலைப்புலிகளின் அரசியல் துறைவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் தமிழ்த் தேசிய உணர்வுடனும் மிகுந்த பொறுப் புணர்வுடனும் தமிழ் மக்கள் எந்தவித மான சிரமங்களையும் பொருட்படுத்தாது, கொளுத்தும் வெயிலில் நீண்ட நேரம் வரிசையாக நின்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஒருமித்து ஒற்றுமையாகத் தமது வாக்குகளைச் செலுத்தி, அதற்கு மகத்தான வரலாற்று வெற்றியைப் பெற்றுக்கொடுத்து, சர்வதேச சமூகத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் பகிரங்கமாகப்

(08ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

கடந்த வெள்ளிக்கிழமை வன்னி மாவட்டம் வவுனியா கோட்டத்தில் வீதிவிபத்தொன்றின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். சொந்தமுகவரி ஆறுமுகம் நடேசதுரை நுணாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம். தற்காலிக முகவரி இல.114, 30 வீட்டுத்திட்டம், உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. என்ற நாட்டுப்பற்றாளரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சுவிஸ் வெளியுறவுத்துறை அதிகாரி கரிகாலனைச் சந்தித்து கலந்துரையாடல்

### ஜெனிவா-பொங்குதமிழில் கரிகாலன் உரை நிகழ்த்துவார்

சுவிற்சர்லாந்து வெளியுறவுத் துறை அமைச்சு அதிகாரிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான கரிகாலனுக்குமிடையில் முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை சுவிற்சர்லாந்தில் வெளியுறவுத் துறை அமைச்சு அலுவலகத்தில் சுவிற்சர்லாந்து நேரப்படி மேற்படி 4.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை ஐரோப்பாவாழ் இலங்கைத் தமிழர்களால் நாளை பொங்குதமிழ் நிகழ்வு நடாத்தப்படவுள்ளது.

இது சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரிலுள்ள ஐக்கிய நாடுகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித்தலைமையுடன் பேசியே ஆதரவு குறித்து முடிவெடுப்பேன்

### ம.ம.முன்னணித்தலைவர் சந்திரசேகரன்

(கொழும்பு)

எக்கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பதுபற்றி வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைமையுடன் பேசியே முடிவெடுப்பேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் கூறியுள்ளார். ஆட்சியமைக்க முயற்சிக்கும் ஐ.ம.சு.முன்னணியினர் தமக்கு ஆதரவளிக்குமாறு கேட்டதற்கே சந்திரசேகரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## ஈ.பி.டி.பி.யினரின் தாக்குதலில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

நேற்று இரவு 11.50 மணியளவில் ஊர்காவற்றுறை, கரச்சி கொத்திக்குளத்தைச் சேர்ந்த கோபாலுப்பிள்ளை ரஞ்சித்குமார் என்பவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களாகிய காந்தன், பஸ்ரின் உட்பட்ட குழுவினர் மேற்படி நபரையும், அவரின் தாயார், மனைவி,குழந்தை என்பவர் களைச் கெபின்களால்தாக்கியும், பிஸ்ரல் காட்டி மிரட்டியும் உள்ளார்கள். இது

(03ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத் தேர்தல் 2004

| அரசியற்கட்சிகள் | வாக்குகள் | வீதம் | மாவட்ட ரீதியான முடிவுகள் | தேசிய பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4,223970 | 45.60% | 92 | 13 | 105 |
| ஐக்கிய தேசிய முன்னணி | 3,504200 | 37.83% | 71 | 11 | 82 |
| இல. தமிழரசுக் கட்சி | 633,654 | 6.84% | 20 | 02 | 22 |
| ஜாதிக ஹெல உறுமய | 552,724 | 5.97 % | 07 | 02 | 09 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 186,876 | 2.02% | 04 | 01 | 05 |
| மலையக மக்கள் முன்னணி | 49,728 | 0.54% | 01 | 0 | 01 |
| ஈ.பி.டி.பி. | 24, 955 | 0.27% | 01 | 0 | 01 |
| மொத்தம் | | | 196 | 29 | 225 |

## வரிவிளம்பரம்

### வெளிவந்துவிட்டது

(பொது அறிவு) தேடலும் தெளிவும்-இதழ் 7 வெளிவர இருப்பவை *பொது அறிவு தேடலும் தெளிவும் -8 2004 -II * மாதிரி வினாத்தாளுடன் கூடிய கடந்தகால வினா விடைகளுடன் "ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி" - 2004 காலம் - 25.04.2004 அறிவமுது புத்தகசாலைகளில் (4419)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம

ஜோண் கல்விநிலையம்

முல்லை வீதி புதுக்குடியிருப்பு 2006 ஆம் ஆண்டிற்கான A/L கலை வகுப்புக்களும், O/L மீட்டல வகுப்புக்களும், A/L விசேட ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. காலம்:- 05.04.2004 திங்கள் பி.ப.3.00 மணி. நிர்வாகி. (4063)

### தவறிவிட்டது

02-04-04 முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் நவரத்தினம் ஜெயசுதன் என்பவரின் தேசிய அடையாள அட்டையும்(762964147) போக்குவரத்து பாசும் வாகன ஓட்டுநர் அத்தாட்சிப்பத்திரமும் அடங்கிய பேஸ் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் வன்னி பகுதியில் இயங்கும் இளவேனில் வாணிபத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் சன்மானம் வழங்கப்படும். (4421)

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

A/L 2004 கலைப்பிரிவு 07/04/2004 (புதன் கிழமை) காலை:- 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி. (4120)



(படம் — சோதி)

நிக்கொட் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பொருட்டு கிராம புனர்வாழ்வுத் திட்டத்தினை தயாரிப்பதற்கான முதற்கட்ட ஒப்பந்தத்தினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றார்.

# தமது அபிலாசைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்திய மக்களுக்கு நன்றி தெரிவிப்பு

## - தமிழர் தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழர்களின் அபிலாசைகளை ஒன்றுபட்டு சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியவர்கள் எம்மக்களே.

இவ்வாறு கிளிநொச்சி பரந்தன் பிரதேச தமிழர் எழுச்சிப் பேரவையினர் மேற்கண்டவாறு அறிக்கைமூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் பதிவை ஏற்படுத்திய இலங்கைப் பாராளுமன்ற 13வது பொதுத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் ஆதரவோடு தேர்தலில் நின்ற கூட்டமைப்பினருக்கு வாக்களித்து அமோக வெற்றியை ஈட்டி சர்வதேச சமூகத்திற்கு தமிழர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தியவர்கள் எமது தமிழினமே. இதுவரை காலமும் தேர்தலைப் பகிஷ்கரித்து வந்த எம் மக்கள் காலத்தின் தேவை உணர்ந்து எமது புலிகள் அமைப்பினர் சுயநிர்ணஉரிமையின் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட தமிழ் மக்களின் தன்னாட்சி அதிகாரத்திற்கான திட்ட வரைபொன்றை அரசிற்கு சமர்ப்பித்து அது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்காத நிலையில் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் உலகத்திற்கு புலிகள் இயக்கத்திற்கே பலம் பொருந்திய ஆணையைக் காட்டியுள்ளனர்.

தமிழர்களின் தலைமை தனக்கான ஒரு பலம்மிக்க தளத்தினைக் கொண்டிருப்பதனையும் ஓர் பலம் பொருந்திய அரசுக்கு நிகராக சமபலம் பொருந்திய சக்தியாக திகழ்வதையும் ஒருமுகரீதியாக எம்மக்கள் வெளிக்காட்டியுள்ளனர். இத்தேர்தலை வெற்றி கொண்டதன் மூலம் எதிரிகளின் தமிழர் தாயக சிதைப்பு எண்ணத்தினை உடைத்தெறிந்ததோடு அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர். இத்தேர்தலின் போது வாக்களிப்பதற்காக வந்த எம்மக்கள் தமது துன்ப துயரங்களைப் பொருட்படுத்தாது வயோதிபர்கள் முதியோர்கள் பாலூட்டும் தாய்மார்கள் கர்ப்பிணித்தாய்மார்கள் எனப் பலதரப்பட்டவர்களும் எம் இனத்தின் விடிவிற்காய் நித்திரை, வெயில் என்பன பாராது வாக்களிப்பின் முதல நாளே தமது வீடுகளிலிருந்து புறப்பட்டு வேறு பிரதேசங்களில் இரவு முழுவதும் தங்கி மறுநாள் அதிகாலையில் வாக்குச்சாவடிக்குச் சென்று தமிழினத்தின் ஏகோபித்தமன உணர்வுகளையும் அரசியல் அபிலாசைகளையும் தன்னாட்சி அதிகாரத்தின் தேவையையும் வெளி உலகத்திற்குக் காட்டிய எம் இனத்திற்கு தமிழர் தேசிய எழுச்சிப் பேரவையும் அரசியல் துறையினரும் தமது மனமார்ந்தநன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (சோ)

# வடக்குகிழக்கு மக்களின் அவலவாழ்வுக்கு முடிவுகாண இ.த.அ.சபை அமைப்பதே ஒரே வழி

## த.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(திருகோணமலை)

"அகதிமுகாம்களில் தொடர்ந்தும் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான தமிழ் மக்களின் அவல வாழ்வுக்கு முடிவுகாண ஒரேமார்க்கம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்று அமைக்கப்படுவதேயாகும் இந்த நிலைப்பாட்டில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஒருமித்து திடமாக இருக்கிறார்கள் என்பது தேர்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது'' தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் மீண்டும் திருகோணமலை மாவட்டபாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான இரா.சம்பந்தன் தம்முடன் தேர்தலின் பின்னர் தொடர்பு கொண்ட ஐக்கிய தேசிய முன்னணித்தலைவர்களிடம் தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தனுடன தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தற்போதைய அரசியல் நிலவரம் பற்றிப் பேசினார்.

நேற்று ஞாயிறு காலை பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சம்பந்தனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிராந்திய அரசியல் நிலவரம் பற்றிப் பேசினார். "தற்போதைய அரசியல் நிலவரம் பற்றி உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கின்றோம்" என்று பிரட்மன்.வீரக்கோனிடம் தெரிவித்த சம்பந்தன், "வடக்கு கிழக்குக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்று அமைக்கப்படவேண்டும். அந்த அதிகாரக்கட்டமைப்பு தமிழ்ப்பிரதேசத்தின் புனர் நிர்மாணம், இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் புனர்வாழ்வு மற்றும் தமிழ் பிரதேசத்துக்கு தேவையான அபிவிருத்தி ஆகியவற்றை மேற்கொள்ளக்கூடிய அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்.

தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதை வடக்குகிழக்கு தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டியுள்ளன" என்றும் வலியுறுத்தினார்.

# சம்பந்தன்-திலக் சந்திப்பு அரசியல் நிலை குறித்து கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்டத் தேர்தலில் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட இரா. சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் முதலில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை நகர அரசியல் அலுவலகத்துக்குச் சென்று, மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் திலக்கைச் சந்தித்தனர்.

அரசியல் நிலவரம் தொடர்பாக கருத்துப் பரிமாறல்கள் அங்கு இடம்பெற்றன. பின்னர் திருகோணமலை சிவன்கோவிலடியில் அமைந்துள்ள தந்தை எஸ்.ஜே.வி.செல்வ நாயகத்தின் சிலைக்கு பாராளு மன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் மாலை அணிவித்தார். பின்னர் சிவன்கோவில் வழிபாடுகளில் கலந்துகொண்டார். இது தொடர்பான ஏற்பாடுகளை திருமலை சிவன்கோவிலடி இளைஞர் அமைப்பு அதன் தலைவர் சுப்றா தலைமையில் மேற்கொண்டிருந்தது.

# யாழ் குடாநாட்டின் பாதுகாப்பு படைத் தலைமை அதிகரிப்பு

(வடமராட்சி)

நாடாளுமன்ற பொதுத்தேர்தல் முடிவுகள் தொடர்ந்தும் வெளியாகிக்கொண்டிருக்கும் நிலையில், குடாநாட்டில் பரவலாக பாதுகாப்பு நடவடிக்கைகளை யாழ் படைத் தலைமை அதிகரித்துள்ளது.

குறிப்பாக கரையோரப்பகுதிகள் மற்றும் நகரங்கள், முக்கிய சந்திப்பகுதிகளில் இலங்கை பொலிசாருடன் இணைந்து இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியை கண்டுள்ள நிலையில், ஆதரவாளர்கள் எதிர்த்தரப்புகளுடன் முரண்படாது அமைதியாக இருப்பது, தொடர்ந்தும் அமைதி நிலையைப்பேண தங்களிற்கு பேருதவியாக இருப்பதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய உயரதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

எனினும் முக்கிய சந்திகள் மற்றும் வீதிகளில் பரவலாக படையினருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளிலும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (27)

# முறைப்பாடுகளை ஏற்கமுடியாது நீதிமன்றில் வழக்குத்தொடருங்கள்

## - தே. ஆணையாளர் ஆனந்தசங்கரிக்கும் டக்ளசுக்கும் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்ட தேர்தல் முறைகேடாக நடந்ததாக முறையிட்ட ஆனந்தசங்கரிக்கும் டக்ளசிற்கும் நீதிமன்றில் வழக்குத் தொடருமாறு தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இவர்களது முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாத தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க இவர்களது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்றும் இதனால் இந்த முறைப்பாடுகள் குறித்து தாம் நடவடிக்கை எதையும் எடுக்க முடியாது என்றும் யாழ்.மாவட்ட தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் அறிவித்துள்ளார்.

பல மாவட்டங்களில் தேர்தல் குறித்து செய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்து நேற்று முன்தினம முடிவுகள் அறிவிப்பு இடைநிறுத்தப்பட்டு நேற்று காலை 11.00 மணிக்குக் கட்சிச் செயலர்களுடன் ஆணையாளர் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் பின்னரே ஆணையாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

# இன்பருட்டியில் சிப்பாய் தற்கொலை முயற்சி

## - படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதி

(வல்வை)

வடமராட்சி வடக்கின் இன்பருட்டி கரையோரப்பகுதியிலுள்ள இராணுவ காவலரணொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த சிப்பாய் ஒருவர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொள்ள முற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேற்று மாலை இன்பருட்டியின் சக்கோட்டை கரையோர கிராமத்திலுள்ள, காவலரண் ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த சிப்பாயொருவரே துப்பாக்கிச் சூட்டிற்குள்ளாகியுள்ளார்.

அவர் கடமையில் ஈடுபட்டிருந்த காவலரண் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டிருந்ததாகவும், இதையடுத்து அங்கு விரைந்த சக சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில் குறித்த சிப்பாய் மீட்கப்பட்டிருந்ததாகவும் கிராம மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை படுகாயமடைந்த குறித்த சிப்பாய் இராணுவ வாகன மூலம் நேற்றிரவு, பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தார்.

எனினும் அவரது நிலை தொடர்பான தகவல்கள் ஏதும் பின்னர் வெளியாகியிருக்கவில்லை.

# குடாநாட்டுக்கான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது

முகமாலைப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கொத்தணி வாக்குச் சாவடிகளால் தடைப்பட்டுப்போயிருந்த யாழ். குடாநாட்டிற்கான வெளியிடத்திற்கான போக்குவரத்துக்கள் சுமூக நிலையை அடைந்துள்ளது. அத்துடன் குடாநாட்டினுள் பொருட்களை எடுத்து வரும் சேவையும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, முகமாலையிலுள்ள இராணுவ பொதிகள் சோதனைச் சாவடிப் பகுதியில் கொத்தணிவாக்கு நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன.

இவ்வாக்கு நிலையங்களை அமைப்பதற்கு ஏதுவாக புதன் கிழமை நண்பகலுடன் குடாநாட்டினுள் பொதிகளுடன் பாரவூர்திகள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது அதேபோன்று பயணிகள் போக்கு வரத்திற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும் வாக்களிப்பு பணிகள் முடிவுற்று, தற்காலிக வாக்களிப்பு நிலையங்களும் அகற்றப்பட்டதையடுத்தே போக்குவரத்து நடவடிக்கைகள் தற்போது சுமுகம் பெற்றுள்ளது. (27)

# தமிழீழ போக்கு வரவுக்கழகத்திற்கு வவு.அரசாங்க அதிபர் நன்றி

(வவுனியா)

நடைபெற்ற 13ஆவது பாராளுமன்றத் தேர்தலில் வன்னி இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் சீராக வாக்களிப்பதற்கேற்ற ஒழுங்கான போக்குவரத்துச் சேவையை நடத்திய தமிழீழ போக்குவரவுக் கழகத்திற்கு வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கணேஸ் நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன் இம்முறை தேர்தல் வவுனியாவில் ஒப்பீட்டளவில் வன்முறைகளற்று சுமுகமாக நடைபெற்றது என்றும் அவர் திருப்தி தெரிவித்துள்ளார்.

# தேடுதலில் கைதான சந்தேக நபர்கள் தகவல்; தெற்கு இங்கிலாந்தில் வெடிபொருட்கள் மீட்பு!

## பாரிய தாக்குதலுக்குத் திட்டம்

**இங்கிலாந்தில் குண்டுகளைத் தயாரிப்பதற்குரிய பெருமளவு வெடிபொருட்கள் மற்றும் உபகரணங்களும் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தவெடிபொருட்கள் தெற்கு இங்கிலாந்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தேடுதலின் போது கைது செய்யப்பட்ட எட்டுச் சந்தேக நபர்கள் மீதான விசாரணையின் போது அவர்கள் கொடுத்த தகவலின்படியே கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.**

இதேவேளை இந்த சந்தேக நபர்கள் மீதான விசாரணையை நடத்துவதற்கு பிரிட்டிஷ் பொலிசாருக்கு மேலும் இரண்டு நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர்கள் 17வயது தொடக்கம் 32வயதுடைய முஸ்லிம் நபர்கள் எனவும் இவர்கள் பாகிஸ்தான் வம்சாவழிவந்த பிரிட்டிஷ் முஸ்லிம் பிரஜைகள் எனவும் பிரிட்டன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்களிடம் இருந்து குண்டு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் முக்கிய பொருளான அரைத் தொன் நிறையுடைய அமோனியம் நைத்திரேட் எனப்படும் வெடிபொருளே கைப்பற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதலுக்குப் பிரிட்டனில் மேற்கொள்ளப்பெற்ற மிகப் பெரிய தேடுதல் நடவடிக்கை இதுவெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட நபரான கனடாவில் பிறந்த மென்கணினி தயாரிப்பாளரான மொகமட் மேலிகதாஜா என்பவர் ஒட்டாவா நகரில் வைத்துக் கைது செய்யப்பட்டதை அடுத்து பிரிட்டனில் நடைபெற்ற தாக்குதலுக்கும் அவருக்கும் தொடர்பிருப்பதாக கனேடியபொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டமை பொலிசாரின் ஒரு குழப்பமான செயல் எனவும் பிரிட்டனில் நடைபெற்ற சம்பவத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் இவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மார்ச்சில் அதிக இழப்பு!

ஈராக்கில் போர் முடிந்து விட்டதாக கடந்த மே மாதம் அமெரிக்கா அறிவித்த பின்னர் கடந்த மார்ச் மாதமே அமெரிக்கப் படையினர் அதிக இழப்புக்களைச் சந்தித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அத்தோடு இதுவரை சுமார் 600 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர்.



அமெரிக்கா தலைமையில் கம்போடியாவில் பேரழிவு ஆயுதங்கள் அழிக்கப்படுகின்றன.

# மனஅழுத்தம் அதிகரிப்பின் மருந்துகள் பயனற்றவை!

## ஆய்வில் கண்டறிவு

உளவியல் அழுத்தங்களால் பாதிக்கப்படும் ஒருவர் காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு உட்கொள்ளும் தடுப்பு மருந்துகள் ஒழுங்காக வேலை செய்வது குறைவு என்று புதிய ஆராய்ச்சி முடிவுகள் கூறியுள்ளன.

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியபல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நடத்திய ஆய்வில் இந்தவிடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் நடத்திய ஆய்வில் இவர் இந்த முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மாணவர்களின் மன அழுத்தம் அதிகரித்திருந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

அதை நுண்ணுயிர் எதிர்ப்பு சக்திகளைத் தூண்டுதல் மிக மந்தமாகவே காணப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.



அமெரிக்காவில் மியாமி டடி நகரில் ஏற்பட்ட தீ மேலும் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தீயணைப்புப்படையினர்.

# தீவிரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை; ஸ்பெயினில் மூன்று சந்தேக நபர்கள் கைது!

## மூன்று அராபியர் சடலங்களும் மீட்பு

ஸ்பெயினில் தீவிர வாதிகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது மூன்று தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஸ்பெயினித் கிராமம் ஒன்றில் தீவிரவாதிகள் என நம்பப்படும் மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவரும் இந்நிலையில் இந்த மூன்று தீவிரவாதிகளும் தங்களைத்தாங்களே சுட்டுத்தற்கொலை செய்திருக்கலாம் என ஸ்பெயினின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்படி இந்த மூவரும் அராபிய இனத்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஸ்பெயினின் மெட்ரிட் ரயில் குண்டுத் தாக்குதலை அடுத்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பாதுகாப்புப் படையினர் சக்திவாய்ந்த 12 கிலோ எடை உடைய வெடி குண்டொன்றைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்துள்ளமை, குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பா.ஜ.க. ஆட்சியில் சீரழிந்துள்ளன

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

பாரதிய ஜனதா தலைமையினால் இந்திய அரசு கடந்த 5 ஆண்டுகள் ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பை கேள்விக் குறியாக்கி விட்டது என்று காங்கிரஸ் சாடியுள்ளது.

அதுமட்டுமன்றி இதுபற்றி விளக்கம் கூறவும் பா.ஜ.க. கடமைப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு ஆயத்தமற்ற நிலையில் தீவிரமற்ற மெத்தனப் போக்கை இந்திய அரசு கடைப்பிடித்தது. பாகிஸ்தானால் ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல் விடயத்தில் தூங்கிப்போய் விட்டது என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சர்மா குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த 5வருடங்களில் போர் விமானங்கள் விபத்துக்குள்ளானது அதிகரித்துள்ளது என்று குறை கூறிய சர்மா இதற்கு தரக்குறைவான உதிரிப்பாகங்களே இந்த விபத்துக்கு காரணம் என்று தகவல்கள் சுட்டிக் காட்டுவதாகக் கூறியுள்ளார்.

# காஷ்மீர் மாநில தேர்தலை கண்காணிக்க அனுமதி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலைப் போலவே வரவுள்ள தேர்தலையும் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் சுதந்திரமாக அவதானிக்க முடியும் என்று தேர்தல் ஆணையம் கூறி யுள்ளது.

மாநிலத்தில் 3நாள் பயணமாக சென்ற தேர்தல் ஆணையர்கள் பி.பி.டான்டன், என்.கோபாலசாமி ஆகியோர் ஜம்மு-காஷ்மீரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் மாநில வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டு தமது கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளாமுடியும் என்றும் வாக்காளர்கள் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க மாநில அரசு புதிய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

# தேர்தலை எதிர்கொண்டு மக்கள் ஆதரவை நாடுக!

## -பிரதமர் வாஜ்பாய் அறிவுரை

(புதுடில்லி)

ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறும் தேர்தல் மூலம் மக்கள் ஆதரவை நாடுமாறும் பிரதமர் வாஜ்பாய் தீவிரவாதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆந்திரா மாநிலத்தில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வாஜ்பாய் தீவிரவாதிகளிடம் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அமைதி அவசியம் என்றும் அதற்கு தே.சனநாயக முன்னணி அரசு, ஆந்திராவின் தெலுங்கு தேசக்கட்சியும் நாட்டின் முழு முன்னேற்றத்திற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறிய அவர், வளர்ச்சி மற்றும் வரவுள்ள தேர்தலில் மக்களின் ஆதரவை நாடுவது ஆகியவையே இரு கட்சிகளின் நோக்கமாகும் என்று பிரதமர் கூறியுள்ளார்.


# பேரழிவு ஆயுத விடயத்தில் உளவுத்துறை தவறிழைத்தது

## கொலின்பவல் ஏற்பு

(வாஷிங்டன்)

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க உளவுத்துறை தெரிவித்ததில் தவறு இடம்பெற்றிப்பதை அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொலின்பவல் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் வடக்குப் பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்றின் மீது சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



சந்தியாகோவில் உள்ள மிருகக்காட்சி சாலையிலுள்ள 15நாள் வயதையுடைய கழுதை தனது புதிய சூழலை அவதானிக்கின்றது.

# யாவும் தேர்தல் வெற்றிக்கானதே!

இந்திய பாராளுமன்றத் தேர்தலில், வெற்றி அடைவதில் முனைப்புக்காட்டிநிற்கும் கட்சிகள் ஏதோ ஒரு விதத்தில் மக்களைக் கவர்ந்து வாக்குகளை அள்ளிவிட வேண்டும் என்பதில் தான் போட்டி போடுகின்றன.

ஒவ்வொரு கட்சியும் எதைக் கையாண்டால் மக்கள் மனம் வசப்படும், எதை சலுகையாகக் காட்டினால் மக்கள் சந்தோசப்



பட்டு வாக்களிப்பார்கள் என்று மக்களை நாடிபிடித்துப் பார்த்து, அவர்களை வளைத்துப் போடுவதில் தான் பேரார்வம்காட்டி நிற்கின்றன.

அந்தவகையில் மீண்டும் துணைப்பிரதமர் அத்வானி ரதயாத்திரையைத் தொடங்கியுள்ளார். வி.பி.சிங்கின் ஆட்சியை ஆட்டம்காண வைத்ததும் ரதயாத்திரைதான். மக்கள் மத்தியில் பாரதிய ஜனதாக்கட்சியை அறிமுகப்படுத்தி பிரபல்யமடைய வைததும் ரதயாத்திரைதான்.

அதனால்தான் ரதயாத்திரை என்றால் அத்வானி என்று கூறுமளவிற்கு அவரை இனம்காட்டிய பெருமை ரதயாத்திரைக்குக் கிடைத திருக்கிறது.

அந்த வகையில் தற்போது அத்வானி ஆரம்பித்துள்ள ரதயாத்திரை மீண்டும் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைத் தக்கவைக்க அதனால்தான் வாஜ்பாயின் சேதியைச்சொல்லும் யாத்திரை (பாரத் உதய் யாத்ரா) என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது.

கன்னியாகுமரியில் தொடங்கி அமிர்தசரஸ்வரை ... குஜராத்தில் காந்தி பிறந்தபோர் பந்தரில் தொடங்கி ஒரிஸாவில் பூரிவரை சுமார் எட்டு ஆயிரம்கிலோ மீற்றருக்கு நீள்கின்றது இந்த ரதயாத்திரையின் தூரம்.

அத்வானி ரதயாத்தரை தொடங்க மற்றொரு காரணமும் உண்டு. பிரச்சார நடவடிக்கைகளுக்கு, அத்வானிக்கு விமானம் பயன்படுத்த அனுமதிக்கப்பட வில்லை.

முன்பு எவருமே ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சியும் சரி பிரச்சாரத்திற்கு விமானத்தைப் பயன்படுத்த அனுமதியளிக் கப்பட்டிருந்தது. இதனால் செலவுகள் அதிகரித்து காணப்பட்டதே தவிர. எதுவித பலனும் இல்லை என்று கூறிய தேர்தல் ஆணையகம் சில வருடங்களுக்கு முன்னர் அதிரடியான முடிவுகளை அறிமுகம்செய்தது.

விமானத்தில் பிரச்சாரம் செய்யச் செல்வார்கள் என்றால் அந்தச் செலவு அந்தந்த வேட்பாளர்களுக்கு உரியதாகக் கருதபடும். பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்படும் செலவுகளைக் கணக்கிட்டு,அளவுக்குக் கூடுதலாக செலவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருமானால் சம்பந்தப்பட்ட வேட்பாளர் அடுத்தமுறை தேர்தலில் பங்குபற்ற முடியாது.

ஆனால் இந்த நடைமுறை பிரதமர் பதவியில் இருப்பவருக்குப் பொருந்தாது.அவர்கள் விமானத்தில் பிரச்சாரம் செய்ய முடியும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இதனைத் தற்போதும் தேர்தல் ஆணையம் மீண்டும் வேட்பாளர்களுக்கு நினைவு கூர்ந்திருந்தது.

அதனால்தான் இந்தியா முழுக்கப் பிரச்சாரம்செய்யும் தனது எண்ணத்தை எப்படி நிறைவேற்றுவது என்று திண்டாடிய அத்வானிக்கு சட்டெனக் கை



கொடுத்திருப்பது பழையபடி அவரது ரத யாத்திரைதான்.

இதேவேளை பிரதமர் பதவியைக் குறிவைத்து அத்வானி காய் நகர்த்தி வந்ததாக முன்பு கூறப்பட்டது. ஆனால் அத்வானியோ அவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் விதமாக பிரதமரின் சாதனைகளைப் பரப்பும் காற்றாக ரதயாத்திரையைத் தொடங்கியுள்ளார். அதுமட்டுமன்றி மீண்டும் அயோத்தியில் ராமர்கோயில் கட்டப்படும் என்றும் முழங்க ஆரம பித்துள்ளர்.

அத்வானியின் ரதயாத்திரை பாரதிய ஜனதாவை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்றுவது என்பதற்கு வலுச்சேர்ப்பதற்கு மற்றொரு கேடயம் ராமர் கோயில்.

அதுமட்டுமன்றி பாரதிய ஜனதா தி.மு.க. தலைமையிலான கூட்டணியைக் கண்டு கலக்கமடைவது போலவே சில நடைமுறைகளை அவசர அவசரமாக மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் இந்திய மக்கள் சினிமா மோகம் கொண்டவர்கள் என்பதைத் தமக்குச் சாதகமாகப்



பயன்படுத்துவதில் முன்நிற்கின்றது. திரையுலக நட்சத்திரங்களை அரசியலுக்குள் இழுத்து, அவர் கள் மூலம் தமது வாக்கு வங்கி களை நிரப்பிக்கொள்வதில் பேரார்வம் காட்டி நிற்கின்றனர்.

திராவிட சித்தாந்தங்களை மறந்து பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வகித்த தி.மு.க, ம.தி.மு.க தற்போது புதிதாக திரா விட சித்தாந்தங்கள் குறித்து முழங்க ஆரம்பித்துள்ளனர்.

திராவிட சித்தாந்தங்கள் நீர்த்துப்போக வைத்துவிட்டோம் என்று வைகோ ஒப்புக்கொண்டுள்ளார். அதனால் தான் திமுக தலைவர் கருணாநிதியுடன் தாம் திராவிட இலட்சியங்களை உயிர்ப்பிக்க களமிறங்கியுள்ளதாக கூறுகின்றார்.

தமிழை உயர்தனி செம்மொழியாக்குவது, தமிழை ஆட்சி மொழியாக்குவது, ஈழத்தமிழருக்கு தொடர்ந்து குரல் கொடுப்பது, சிறுபான்மையினரின் நலனைக் காப்பது, விஸ்வஹிந்து பரிசத்தினை எதிர்ப்பது, கட்டாய மதமாற்ற தடைச்சட்டத்தை அகற்றுவது, பொது சிவில் சட்டத்தை எதிர்ப்பது போன்றவற்றில் தி.மு.க, ம.தி.மு.க இணைந்து நிற்கின்றன.

இதேவேளை அ.தி.மு.க.வும் பல அதிரடிகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா ஏழைகளுக்கு இலவச வேட்டி- சேலை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் போன்ற பல சலுகைகளை பொருளாதார சீர்திருத்தம் எனும் பெயரில் நிறுத்தினார்.

அதுமட்டுமன்றி கட்டாய மத மாற்ற தடைச்சட்டம் கோவில்களில் ஆடு, மாடு, கோழி பலியிடத தடை எனும் அதிரடிச் சட்டங்களையும் கொண்டு வந்தார்.

எல்லாமே தேர்தல் வரும் வரைதான் என்பதை அவர் இப்போது நிருபித்துள்ளார்.

இரும்புக்கை கொண்டு அரச ஊழியர்களின் போராட்டத்தை நசுக்கி, 999 பேரை பதவிநீக்கம் செய்தார், தற்போது விடாப்பிடியாக பதவிநீக்கம் செய்யப்பட்ட 999 பேரையும் மீண்டும் வேலைக்குச் சேர்த்துள்ளார். இலவச வேட்டி வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார். இலவச மின்சாரம் கோரி எத்தனையோ தடவை விவசாயிகள் போராட்டம் நடத்திய போது தலைசாய்க்காதவர் இப்போது எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடரும் என்று அறிவிப்புச் செய்துள்ளார்.

கிராமப்புற மக்களிடம் எதிர்ப்பைக் கிளப்பிய மிருக பலியிடல் சட்டத்தை திரும்பப் பெற்றுள்ளார். இதேவேளை தேர்தல் காலத்தை பயன்படுத்தி லாட்டரி மீதான தடையையும் நீக்க வேண்டும் என்று லாட்டரி விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

எங்கே தோல்வி ஏற்பட்டு விடுமோ.... முதலமைச்சர் பதவி பறிபோய் விடுமோ... எனும் அச்சம் தான் இத்தகைய முடிவுகளை தமிழக முதலமைச்சர் எடுக்கக் காரணம்.

ஏனெனில் மக்கள் தனக்கு எதிராக திரும்பி இருக்கின்றார்கள என்பதை உணர்ந்து கொண்டுள்ளார்கள். அதனால் தான் தான் போட்ட சட்டங்களையும், சீர்திருத்தங்களையும் வாபஸ பெற்றுள்ளார்.

தற்போது அரசஊழியர்கள், விவசாயிகள் கிராமப்புற மக்கள் பக்கம் தனது தேர்தல் தந்திரத்தை திருப்பியுள்ள ஜெயலலிதா இன்னும் நிறையப்பேர் மீது கூட கருணை காட்டுவார்.

மதுபானசாலை அரசுடமை நீக்கம் கந்துவெட்டி சட்டவாபஸ், சட்டவிரோத மண்அகழ்வு, அரசுடமை நீக்கம்...என்று கூறி அறிவிப்புச் செய்தாலும் ஆச்சரியப்படமுடியாது. ஆனால் அரச ஊழியர்கள் பலர் பதவி நீக்கம் என்று அறிந்ததும் மரணமடைந்துள்ளார்கள். இவர்களை எப்படி மீட்கப்போகின்றார்? போன உயிரை திருப்பிக்கொண்டு வரும் வழி தமிழக முதலமைச்சருக்குத் தெரியுமானால் அவரது சலுகைகளை மக்கள் நம்பக் கூடும். அதுமட்டுமன்றி "தமிழக முதலமைச்சரை தூங்க விட மாட்டேன்" என்று மதிமுக வைகோ சபதம் இட்டுள்ளார். தி.மு.க தலைமையிலான கூட்டணி ஜெயலலிதாவை தான் பிரசாரக்கருப் பொருளாகக் கொண்டுள் ளார்கள்.

இதனை முறியடிக்கவும் தமிழகத்தை தன்வசப்படுத்தவுமே ஜெயலலிதா அதிரடி சலுகை



களை அள்ளி வழங்கியுள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு கட்சிகளும் தமது தேர்தல் வியூகத்தை அமைத்துக்கொண்டு செயற பட்டாலும் இவற்றில் எது உண்மை, எது பொய் என்று மக்கள் உணர்ந்து கொள்வதுடன், நாட்டை யாரிடம் ஒப்படைப்பது என்றும விழித்துக்கொள்ளவேண்டும். அல்லாதவிடத்து அடாவடித்தனம் கொண்டவர்களும் கதிரையில் அமர்ந்து மக்களை பாடாய்படுத்தி விடுவார்கள் என்று தான் கூற வேண்டியிருக்கும்!

**அ. கலைவாணி**

-கிளி.மாவட்ட வைத்தியசாலையில்-

## யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியில் அமைக்கப்பட்ட பெண்கள் நோயாளர் விடுதி கையளிப்பு

யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியில் போரூட் வன்னி கருத் திட்டத்தில் சுகாதார திணைக்களத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற பெண்கள் நோயாளர் விடுதி கையளிப்பு நிகழ்வு கடந்த 31.03.2004 ஆம் திகதியன்று நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் மா.ஜெறாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகவணக்கம், வரவேற்புரை, தலைமையுரையினை தொடர்ந்து சிறப்புரைகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம், போரூட் நிறுவன திட்ட முகாமையாளர் பதில் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாள, வைத்திய கலாநிதி தவராசா ஆகியோர் வழங்கினர். சிறப்புரைகளைத் தொடர்ந்து பெண்கள் நோயாளர் விடுதியின் கையளிப்பு இடம் பெற்றது. வேலைகள் செய்து முடிக்கப் பெற்றமை தொடர்பான பொறியியலாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் கூடிய வேலைக்கான சான்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளரினால் பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. கட்டடத்தின் திறவுகோல்கள் யு.என்.எச்.சி. ஆர் நிறுவன வெளிக்கள அலுவலர், போரூட் திட்ட முகாமையாளர் ஆகியோரால் பதில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப் பட்டது. இந்நிகழ்வில் சுகாதாரத திணைக்களத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதிகள் போரூட் நிறுவனத்தைச்சார்ந்த சாந்தலிங்கம், கமலநாதன், கெங்காதரன், யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தைச்சார்ந்த சிற்றம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது. (சோ)

## அம்பாறை மாவட்டத்தில் பலதேர்தல் முறைகேடுகள்

### ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளில் வாக்களிக்கச் சென்ற வாக்காளர்கள் தடுக்கப்பட்டனர், விரட்டியடிப்பு, கள்ளவாக்களிக்க முயற்சித்தமை போன்ற பல தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார். இது சம்பந்தமாக தேர்தல ஆணையாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ளார். நேற்று முன்தினம் வன்முறைச்சம்பவங்களின் போது சம்மாந்துறையில் 18 வயது இளைஞன் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார். அத்துடன் பத்துப்பேர் தாக்குதல்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளி.இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கல் இடைநிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சிறார்களுக்கு இலைக்கஞ்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பெற்று வந்த இலைக்கஞ்சி வழங்கல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து வித்தியாலய முதல்வர் ம.உமாசங்கருடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்,

மேற்படி இலைக்கஞ்சித் திட்டத்திற்கு கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியத்தின் ஒதுக்கீட்டின் பிரகாரம் வித்தியாலய மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப் பெற்று வந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இவ் இலைக்கஞ்சி வழங்கல் நிறுத்தப் பட்டமையால் இம்மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்குவது நிறுத் தப்பட்டுள்ளதுடன் இம்மாணவர் களுக்கு இலைக்கஞ்சி வழங்க என்னாலான நடவடிக்கைகள் பலதடவைகள் மேற்கொள்ளப் பெற்றும் இதுவரை எவ்வித சாதகமான பதில்களோ நடவடிக்கைகளோ கிட்டவில்லையென கவலையுடன் தெரிவித்துள்ளார்.

மேற்படி வித்தியாலயத்தில் 1ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரை 375 மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### தையல் இயந்திரம் வழங்கல்

பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட மிகவும் கஸ்ரப்பட்ட குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கி அதன்மூலம் தொழில்வாய்ப்பைப் பெற்று அக்குடும்பம் பொருளாதார ரீதியில் முன்னேறுவதற்காக அண்மையில் மன்னாரில் 40தையல் இயந் திரங்கள் பெண்களைத் தலை வர்களாகக் கொண்ட விதவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத் துடன் தையல் சம்பந்தமான பயிற்சியும் சமூகசேவைப் பகுதியினரால் வழங்கப்பட்டுள்ளது.

# பொதுத்தேர்தல்-2004
# மாவட்ட ரீதியான முடிவுகள்

## மாவட்டம்:-கொழும்பு

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 441841 | 09 |
| ஐ.ம.சு.முன்னணி | 414688 | 08 |
| ஹெல.உ.றுமய | 190618 | 03 |
| புதிய இட.முன்னணி | 2037 | |
| ஈ.பி.டி.பி | 539 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 1467751 | |
| அளிக்கப்பட்டவை | 1096571 | |
| நிராகரிக்கப்பட்டவை | 38605 | |
| செல்லுபடியானவை | 1057966 | |

## மாவட்டம்:-கம்பஹா

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 367572 | 06 |
| ஐ.ம.சு.முன்னணி | 509963 | 09 |
| ஹெல.உ.றுமய | 102516 | 02 |
| புதிய இட.முன்னணி | 932 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 13,27145 | |
| அளிக்கப்பட்டவை | 10,30864 | |
| நிராகரிக்கப்பட்டவை | 40862 | |
| செல்லுபடியானவை | 990002 | |

## மாவட்டம்:-காலி

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 209399 | 04 |
| ஐ.ம.சு.முன்னணி | 306385 | 06 |
| ஹெலஉறுமய | 22826 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 716709 | |
| அளிக்கப்பட்டவை | 571891 | |
| நிராகரிக்கப்பட்டவை | 30380 | |
| செல்லுபடியானவை | 541511 | |

## மாவட்டம்:-மாத்தறை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 1,39 633 | 03 |
| ஐ.ம.சு.முன்னணி | 241235 | 05 |
| ஹெலஉறுமய | 16229 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 5,50506 | |
| அளிக்கப்பட்டவை | 4,23002 | |
| நிராகரிக்கப்பட்டவை | 22769 | |
| செல்லுபடியானவை | 4,00233 | |

## மாவட்டம்:-மொனராகலை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 71067 | 02 |
| ஐ.ம.சு.முன்னணி | 1,17456 | 03 |
| ஹெலஉறுமய | 2675 | |
| லலித்முன்னணி | 275 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 262742 | |
| அளிக்கப்பட்டவை | 204929 | |
| நிராகரிக்கப்பட்டவை | 12816 | |
| செல்லுபடியானவை | 192113 | |

## மாவட்டம்:-பதுளை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 181705 | 05 |
| ஐ.ம.சு.முன்னணி | 178634 | 03 |
| ஹெலஉறுமய | 6932 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 511115 | |
| அளிக்கப்பட்டவை | 400337 | |
| நிராகரிக்கப்பட்டவை | 30159 | |
| செல்லுபடியானவை | 370178 | |

## மாவட்டம்:-இரத்தினபுரி

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 2,05490 | 04 |
| ஐ.ம.சு.முன்னணி | 2,61450 | 06 |
| ஹெலஉறுமய | 20801 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 6,47035 | |
| அளிக்கப்பட்டவை | 5,20349 | |
| நிராகரிக்கப்பட்டவை | 28346 | |
| செல்லுபடியானவை | 4,92003 | |

## மாவட்டம்:-கேகாலை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 1,86641 | 04 |
| ஐ.ம.சு.முன்னணி | 2,14267 | 05 |
| ஹெலஉறுமய | 18034 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 5,70299 | |
| அளிக்கப்பட்டவை | 4,46816 | |
| நிராகரிக்கப்பட்டவை | 25685 | |
| செல்லுபடியானவை | 4,21131 | |

## மாவட்டம்:-அநுராதபுரம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 148612 | 03 |
| ஐ.ம.சு.முன்னணி | 2,12943 | 05 |
| ஹெலஉறுமய | 8034 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 5,14149 | |
| அளிக்கப்பட்டவை | 3,93406 | |
| நிராகரிக்கப்பட்டவை | 21281 | |
| செல்லுபடியானவை | 3,72125 | |

## மாவட்டம்:-பொலநறுவை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 75664 | 02 |
| ஐ.ம.சு.முன்னணி | 106243 | 03 |
| ஹெலஉறுமய | 2413 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 2,54062 | |
| அளிக்கப்பட்டவை | 197934 | |
| நிராகரிக்கப்பட்டவை | 12673 | |
| செல்லுபடியானவை | 1,85261 | |

## மாவட்டம்:-நுவரெலியா

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 1,76971 | 04 |
| ஐ.ம.சு.முன்னணி | 82945 | 02 |
| ம.ம.மு | 49728 | 01 |
| பதிவுசெய்யப்பட்டவை | 4,36236 | |
| அளிக்கப்பட்டவை | 3,52022 | |
| நிராகரிக்கப்பட்டவை | 24413 | |
| செல்லுபடியானவை | 32,7609 | |

## மாவட்டம்:-மாத்தளை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 100642 | 02 |
| ஐ.ம.சு.முன்னணி | 108259 | 03 |
| ஹெலஉறுமய | 8819 | 00 |
| பதிவுசெய்யப்பட்டவை | 312556 | |
| அளிக்கப்பட்டவை | 239611 | |
| நிராகரிக்கப்பட்டவை | 19549 | |
| செல்லுபடியானவை | 220062 | |

## மாவட்டம்:அம்பாந்தோட்டை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 98877 | 02 |
| ஐ.ம.சு.முன்னணி | 178895 | 05 |
| லலித் முன்னணி | 252 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 384361 | |
| அளிக்கப்பட்டவை | 297034 | |
| நிராகரிக்கப்பட்டவை | 17724 | |
| செல்லுபடியானவை | 279310 | |

## மாவட்டம்:-புத்தளம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 1,35152 | 03 |
| ஐ.ம.சு.முன்னணி | 1,42784 | 05 |
| ஹெலஉறுமய | 10000 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 4,50057 | |
| அளிக்கப்பட்டவை | 311194 | |
| நிராகரிக்கப்பட்டவை | 21431 | |
| செல்லுபடியானவை | 2,89763 | |

## மாவட்டம்:-குருநாகல்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 412157 | 09 |
| ஐ.தே.முன்னணி | 340768 | 07 |

## மாவட்டம்:-களுத்துறை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 2,12721 | 03 |
| ஐ.ம.சு.முன்னணி | 2,91208 | 06 |
| ஹெலஉறுமய | 56615 | 01 |
| பதிவுசெய்யப்பட்டவை | 7,46138 | |
| அளிக்கப்பட்டவை | 5,93760 | |
| நிராகரிக்கப்பட்டவை | 30741 | |
| செல்லுபடியானவை | 5,63019 | |

## மாவட்டம்:-யாழ்ப்பாணம்

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| தமிழரசுக்கட்சி | 257320 | 08 |
| ஈ.பி.டி.பி | 18612 | 01 |
| பதிவுசெய்யப்பட்டவை | 644879 | |
| அளிக்கப்பட்டவை | 305259 | |
| நிராகரிக்கப்பட்டவை | 21233 | |
| செல்லுபடியானவை | 208426 | |

## மாவட்டம்:-வன்னி

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.முன்னணி | 33621 | 01 |
| ஐ.ம.சு.முன்னணி | 7259 | |
| தமிழரசுக்கட்சி | 90835 | 05 |
| பதிவுசெய்யப்பட்டவை | 226604 | |
| அளிக்கப்பட்டவை | 151003 | |
| நிராகரிக்கப்பட்டவை | 140377 | |
| செல்லுபடியானவை | 10626 | |

## மாவட்டம்:-மட்டக்களப்பு

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| இ.த.க | 1576919 | 04 |
| சி.மு.காங்கிரஸ் | 42518 | 01 |
| பதிவுசெய்யப்பட்டவை | 920691 | |
| அளிக்கப்பட்டவை | 236712 | |
| நிராகரிக்கப்பட்டவை | 12589 | |
| செல்லுபடியற்றவை | | |

## மாவட்டம்:-திருமலை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 31053 | 01 |
| தமிழரசுக்கட்சி | 69087 | 02 |
| சி.மு.காங்கிரஸ் | 6519 1 | 01 |
| பதிவுசெய்யப்பட்டவை | | |
| அளிக்கப்பட்டவை | 182869 | |
| நிராகரிக்கப்பட்டவை | 174292 | |
| செல்லுபடியானவை | 8577 | |

## மாவட்டம்:-கண்டி

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 268131 | 05 |
| ஐ.தே.முன்னணி | 313859 | 06 |
| ஜா.ஹெல உறுமய | 42192 | 02 |
| பதிவுசெய்யப்பட்டவை | 880634 | |
| அங்கீகரிக்கப்பட்டவை | 673350 | |
| அளிக்கப்பட்டவை | 677866 | |
| நிராகரிக்கப்பட்டவை | 4516 | |

## மாவட்டம்:-அம்பாறை

| கட்சிகள் | வாக்குகள் | ஆசனம் |
|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | 111747 | 03 |
| ஐ.தே.முன்னணி | 42121 | 01 |
| சிறி.மு.காங்கிரஸ் | 76563 | 02 |
| இ.த.கட்சி | 55533 | 01 |
| ஈ.பி.டி.பி | 1611 | 0 |
| ஜா.ஹெல உறுமய | 1130 | 0 |
| பதிவுசெய்யப்பட்டவை | 379044 | |
| அளிக்கப்பட்டவை | 308625 | |
| அங்கீகரிக்கப்பட்டவை | 290361 | |
| நிராகரிக்கப்பட்டவை | 18264 | |

# விவசாய மேம்பாட்டுக்கு முல்லையில் நடவடிக்கை

(புதுக்குடியிருப்பு)

உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச்செயலகமும் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து பெரியகுளம், ஒதியமலை,சிவநகர், பழம்பாசி, தட்டயர்மலை, கணேச புரம், கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தண்டுவான் மகாவித்தியாலயத்தில் நீரிறைக்கும் பம்பிகள் வழங்கப்பட்டன.

கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் த.பொ.மே. நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர், ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயப் போதனாசிரியர் ஒட்டுசுட்டான் கமநல கேந்திர நிலையத்தலைவர் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய மேற்படி நிகழ்வில் தேசியக் கொடியினை த.பொ.மே. நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலர் ஏற்றி வைத்தார்.

நிகழ்வினைத் தொடர்ந்து பெருமளவிலான விவசாயிகளுக்கு கமநல வங்கி,கால் நடை வளர்ப்பும் பராமரிப்பு, பயிர்ப்பாதுகாப்பும் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன என பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

# குடாநாட்டில் பாதிப்புற்ற மாணவருக்கு உதவி

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலனை கருத்திற் கொண்டு மாணவர் முன்னேற்ற நிலையம் என்ற அமைப்பு யாழ். மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகளைச் செய்து வருகின்றது.அந்தவகையில் வலிகாமப் பிரதேசத்தில் வாழும் 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளதுடன் பாடசாலைகளிலிருந்து வறுமை காரணமாக இடைவிலகிய மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சிநெறிகளையும் வழங்கி வருகின்றது.இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் நன்மை அடைந்து வருகின்றனர். இதேவேளை இவ்வுதவித்திட்டங்களை யாழ். குடா நாடு பூராகவும் விஸ்தரிக்க இவ்வமைப்பு திட்டமிட்டு வருகிறது. (33)

# விசுவமடு குளத்தின் நீர் வெளியேறும் கதவு விவசாயிகளின் முயற்சியால் சீரமைப்பு

## கடற்புலிகளும் உதவிவழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

**விசுவமடுக்குளத்தில் இருந்து விவசாய பயன்பாட்டுக்காக நீரை வெளியேற்றும் சுலுசின் கதவு மிக மோசமாக சேதமடைந்திருந்த நிலையில் அப்பகுதி விவசாயிகளின் கடுமையான முயற்சியால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.**

மேற்படி கதவு கடந்த மாதம் 12 ஆம் திகதி மோசமாக சேதமடைந்த நிலையில் குளத்தில் இருந்து பெருமளவு நீர் தன்னிச்சையாக வெளியேற ஆரம்பித்தது.

இவ்வாறு குளத்தில் இருந்து நீர் வெளியேறுவதை அவதானித்த விசுவமடு பரவல் நீர்ப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர், செயலாளர் உள்ளிட்டோர் உடனடியாகவே அப்பகுதி விவசாயிகளை அழைத்து விவசாய சங்கக் கூட்டத்தைக் கூட்டி குளத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பை பற்றியும் அதனை உடனடியாக திருத்தாது விடுவதனால் ஏற்படப்போகும் மோசமான விளைவுகள் பற்றியும் எடுத்துக்கூறியதை அடுத்து உடனடியாக விவசாயிகள் நிதி உதவியுடன் குளத்தின் பழுது திருத்தப்படுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் உதவியுடன் குளத்தில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்த நீர் தடுத்து நிறுத்தப்பட்டு குளத்தின் சுலுசு கதவு முற்றாக அகற்றப்பட்டு அதற்குரிய புதிய கதவு பொருத்தப்பட்டது.

இது தொடர்பாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கையில் மேற்படி குளத்தில் ஏற்பட்ட தாக்கம் நீக்கப்பட்டிராதுவிட்டிருந்தால் குளத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர் முழுவதும் பயனற்று வெளியேறி இருப்பதுடன் தமது விவசாய நடவடிக்கைகள் அனைத்துமே முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கும் எனவும் தக்கதருணத் தில் வந்து தமக்கு கரம் கொடுத்த கடற்புலிகளுக்குத் தாம் நன்றி தெரிவிப்பதாகவும்தெரிவித்தனர். (லோபி)

# கரைச்சி விளையாட்டுப் போட்டி நாளைய தினம் ஆரம்பம்

(அலுவலகசெய்தியாளர்)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா 2004 நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கிளி.கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழா நிகழ்வில் கிளி..அரச அதிபர் இராசநாயகம் முதன்மைவிருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளையும் நாளை மறுதினமும் மேற்படி மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


செந்தமிழன் 6ஆம் ஆண்டு நினைவுகள்

வீட்டிற்கு வரமாய் 14 09 1972

நாட்டிற்கு உரமாய் 05 04 1998



2ம் லெப்ரினன்ட் செந்தமிழன்

திருச்செல்வராசா- பிரபாகரன்

7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

உனது நினைவுகளுடன்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.

(4062)



08ம் ஆண்டு நினைவில்...

வீரச்சாவு 05 04 1996

கப்டன்
பூலோ /விருதலை
(சீவரட்ணம் ரஞ்சித்குமார்
யாழ்ப்பாணம்)

லெப்.
கரிகாலன் /அருள்
( சண்முகம் யோகநாதன்
வவுனியா)

தரணியில் தாய்நிலத்திற்கோர்
முகவரியிடப் புறப்பட்டவரே உங்கள்
நினைவுடன்,கனவுடன்.

உங்கள் நினைவுடன்
உடன்பிறந்தோர்
பூங்குயில்,பிரியன்(போராளிகள்)

(4420)



4ம் ஆண்டு நீங்காத நினைவில்

தாய்மடியில் முத்தாக 13 04 1977

தாயகமண்ணில் சொத்தாக 15 04 2000



மேஜர் நிர்மலா

கேணல்கிட்டுப்பீரங்கிப் படையணி

(செல்வரத்தினம், விஜயலட்சுமி)
தம்பிராய், பூநகரி.

காவியத் தலைவன் அணியினில் நின்று
களத்தில் காவியமான – எம் கண்மணியே
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறாது உம் நினைவு.

தகவல்:-
செ. விக்னேஸ்வரி (தாய்)

நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

(4411)



# விண்ணப்பம் கோரல்

ஈழநாதம் நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவி ஆசிரியர்**

**கல்வித்தகைமை-**

I. பல்கலைக்கழகப்பட்டதாரி

*அல்லது*

II. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியுடன் ஊடகத்துறையில் அனுபவம்.

**02. அலுவலக செய்தியாளர்**

**கல்வித்தகைமை:**

I. க.பொ.த உயர்தரத்தில் சித்தி.

**03.ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பாளர்**

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு ஒலிப்பதிவு நாடாவில் இருந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் மொழிபெயர்க்கும் ஆற்றல்.

**04.ஒப்புநோக்குநர்**

**கல்வித்தகைமை:**

I. க.பொ.த. உயர்தரத்தில் தமிழ் உட்பட 3 பாடங்களில் சித்தி அடைந் திருத்தல் வேண்டும், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அல்லது முன்னனுபவமுள்ளவர்கள்.

குறிப்பு:
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் 10-04-2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு முதன்மைச்சாலை கிளிநொச்சியில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு சமுகம் தரவும்.

பொதுமுகாமையாளர்.
ஈழநாதம்.

(இ)



## சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்கவேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-04-2004

## புதிய அரசாங்கம்?

சிறிலங்கா பாராளுமன்றத்திற்கான தேர்தல் முடிவு முற்றிலுமாகவெளிவந்துள்ளன. ஆட்சியிலிருந்த ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கு இத்தேர்தல் முடிவுகள் சாதகமானதாக இல்லை. இதேவேளை மற்றொரு அதிகார மையமான சந்திரிகாகுமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் முன்நிலை பெற்றுள்ளது.

ஆனால், இம்முறை தென்னிலங்கையில் தேர்தல் வாக்களிப்பானது தெளிவான வரையறையுடன் இடம் பெற்றுள்ளது என்றே கொள்ளவேண்டியுள்ளது. அதாவது சமாதான முயற்சிகளை முன்னெடுத்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி சிறுபான்மையினரின் ஒத்துழைப்புடன் தேர்தலைச் சந்தித்துப் பின்னடைவைக் கண்டுள்ளது.

இதேவேளை, ஜே.வி. பி. யுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலைச் சந்தித்த சிறிலங்காசுதந்திரக் கட்சி சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதியை வழங்கியிருப்பினும், கடந்த கால சமாதான முயற்சிகளுக்கு அதன் ஆதரவு இருக்கவில்லை. இந்நிலையில் சமாதான முயற்சி குறித்த அதன் அறிவிப்புக்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்கப்படுகின்றது. அதற்கு ஜே.வி.பி.யின் அறிவிப்புக்களும் காரணமாக உள்ளன.

ஆனால், தற்போதைய நிலவரத்தின் படி ஐ.ம.சு முன்னணியோ அன்றி ஐக்கிய தேசிய முன்னணியோ தனித்துவமாக ஆட்சியமைப்பதற்கான பலத்தைப் பெறக் கூடிய சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது அறுதிப் பெரும்பான்மையான 113 ஆசனங்களை இக்கூட்டணியில் எதுவும்பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாக இல்லை.

ஆகையினால், புதிய கூட்டணிகள்-- அதாவது ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன. அதிலும் குறிப்பாக அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஐ.ம.சு முன்னணி இம்முயற்சியில் தீவிர ஈடுபாடு காட்டுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ரீதியில் , எக்கட்சி ஆட்சிக்கு வரினும் அமைச்சர்களாக இருந்து வரும் கட்சியின் தலைவர்களுடன், (தற்பொழுது எதிரணியில் இருப்பவர்கள்) திரைமறைவுப் பேரங்களில் அது ஈடுபடத் தொடங்கி விட்டனரெனத் தகவல்கள் கூறுகின்றன. இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஆகையினால் அரசாங்கம் அமைப்பதற்கு முன்னர் புதிய கூட்டணிகள் உருவாகலாம் என்றே துணிந்து கூற முடியும். அதாவது அமைச்சுப் பதவிகளோ அன்றிப் பெருந்தொகைப் பணம் கைமாறல்களோ இதில் இடம்பெறலாம்.

ஆனால், எது எவ்வாறு இருப்பினும் இம்முறை 22 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள தமிழரசுக் கட்சி சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடானது முக்கியமானதாகும். ஏனென்றால், எவ்வரசாங்கம் பதவியேற்பினும் இனப்பிரச்சினைக்கானதொரு அரசியற்தீர்வு என்பதும், அது தொடர்பான பேச்சுவார்த்தை என்பதும் முக்கியமானதொன்றாகும்.

தற்பொழுது அதிகப்படியான ஆசனங்களை ஐ.ம.சு. முன்னணி பெற்றுக்கொண்டுள்ளமையானது, அக்கூட்டணி ஆட்சிக்கு வருவதான அதிகளவிலான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது என்பது நிராகரிக்கப்படமுடியாததே. ஆனால் கடந்த அரசாங்கத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் யுத்த நிறுத்த உடன்பாடு என்பன குறித்து ஆட்சிக்கு வருபவர்கள், மேற்கொள்ளும் நிலைப்பாடு எத்தகையது என்பது முக்கியமானது.

ஆனால், எது எவ்வாறாயினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தொடர்பான ஐ.ம.சு.முன்னணியின் அணுகுமுறையே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும் எனத் துணிந்து கூற முடியும். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சூழலை உருவாக்கும் வகையில் புதிய ஆட்சியாளர்கள் நடந்துகொள்ளும் போதே இனப் பிரச்சினை தொடர்பான முடிவிற்கு வரமுடியும். இதுவே இலங்கையின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதாக இருக்கும்.

# வெளிநாட்டு முதலீட்டாளரின் வருகை சமாதான நடவடிக்கைகளில் தங்கியுள்ளது

### -சிறிலங்கா முதலீட்டுசபை வலியுறுத்து

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் மட்டுமே வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சிறிலங்கா வருகை தங்கியுள்ளது என்று முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்.

சிறிலங்காவில் முதலிட அதிக ஆர்வம் காட்டும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டின் சமாதான நடவடிக்கைகளின் தன்மையை மட்டுமே கருத்தில் கொண்டுள்ளனர்.

அரசும் புலிகளும் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் உல்லாசப் பிரயாணத்துறை,சர்வதேச போக்குவரத் துக்கள், வர்த்தக ஒப்பந்தங்கள் பண்டமாற்று வர்த்தகம், சர்வதேச சந்தை வாய்ப்புக்கள், நிதியுதவிகள், கடன்வழிகள், புதிய தொழில் துறைகள் ஆரம் பம், அதிகளவிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஏற்று மதிகள் போன்ற பல்வேறு துறைகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. இதனால் சீரழிந்திருந்த பொருளாதாரம் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.முழு உலகமும் சமாதான நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே படிப்படியாக இவ்வாறான முன்னேற்றம் கிடைத்துள்ளது. குறுகிய கால அபிவிருத்தியை நோக்கி நாடு பயணம் செய்துள்ளது என்றார்.

# வீட்டுத்திட்ட மானிய கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

கடந்த காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வழங்கப்படாமல் இருந்த வீட்டுத் திட்ட மானியக்கொடுப்பனவுகள் தற்சமயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இதில் 15 ஆயிரம் ரூபா வீட்டுத்திட்டம், 25 ஆயிரம் ரூபா வீட்டத்திட்டம் 1 லட்சம் ரூபா வீட்டுத்திட்டம் என மூன்றாகப்பிரிக்கப்பட்டு வழங்கப்படாமல் இருப்பவர்களுக்கு வழங்குவதற்காக மன்னார் நகர பிரதேச செயலாளர் சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் விபரங்களை உடனடியாக அனுப்புமாறு வேண்டியுள்ளார். (மி)

# எத்தரப்புடனும் கூட்டுச்சேரோம் ஜாதிகஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய எந்தவொரு கட்சியுடனும் கூட்டுச்சேரமாட்டாதென அந்தக்கட்சியின் பிரதிநிதி சங்கைக்குரிய உடுவேதம மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்துள்ள பொதுத் தேர் தலில் ஜாதிகஹெல உறுமய என்ற பிக்குமாரின் கட்சி கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளமை தெரிந்ததே. இதே வேளை புதிய அரசாங்கத்தை அமைப்பதற்குபிரதான கட்சிகள் இரண்டுமே ஏனைய கட்சிகளை நாடவேண்டியதேவை உள்ளதாகவும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# புதிதாக பதவியேற்கும் அரசாங்கம் சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டும்

(கொழும்பு)

பதவி ஏற்கும் புதிய அரசாங்கத்தின் கீழ் சமாதான நடவடிக்கையினை புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை கூட்டு வர்த்தக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் ஒழுங்கீனங்கள் நடந்ததாகக் கூறப்படும் சிலவாக்குச சாவடிகளின் முடிவுகள் தொடர்பாக சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் எடுத்து வரும் நடவடிக்கையினால் புதிய அரசாங்கம் அமைக்கபபடுவது தாமதிக்கக் கூடாதென வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது. சில வாக்குச்சாவடிகளின் முடிவுகளை ரத்துச்செய்து விட்டு புதிய தேர்தலை நடத்துவதானால் அடுத்த அரசாங்கம் அமைக்கப்படுவது தாமதப்படலாம் எனவும் புதிய அரசாங்கத்தை விரைவில் அமைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

# நீர்மின் உற்பத்திக்கான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தில் முன்னேற்றம் எதுவுமில்லை!

(கொழும்பு)

நீர் மீன் உற்பத்தி இடம்பெற்று வரும் நீர்த் தேக்கங்களில் இன்னமும் நீர்மட்டம் குறைந்தளவிலேயே உள்ளதாக சிறிலங்கா மின்சாரசபையின் தலைவர் எம்.எம்.சுபைர் தெரிவித்துள்ளார்.

மலையகப்பிரதேசங்களிலே ஆங்காங்கே மழைபெய்துள்ள போதிலும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் போதியளவு உயரவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். காசல்றி, மௌசாசலை,கொத்மலை, விக்ரோறியா, சமனவெவ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மின்சாரத்தை 24 மணி நேரமும் தடைஇன்றித் தொடர்ந்தும் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அனல்மின் சாரம் பயன்படுத்தப்படுவதாக வும் இதனால் செலவினங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.ம.சு.மு. அரசமைத்ததும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்

### ஜே.வி.பி. கூறுகின்றது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கவிருக்கும் புதிய அரசாங்கம் தேர்தலின்போது முன்னணி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என ஜே.வி.பி.யின்பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.விமல்வீரவன்ச மேலும் கூறும்போது, தமது புதிய அரசு ஒழிவுமறைவற்ற ஆட்சியை நடத்த உறுதிபூண்டுள்ளது எனவும் சகல சமூகங்களும் சமஉரிமையோடும் கௌரவத்தோடும் வாழ்வதற்கான சமூக அமைப்பு முறையை கூட்டமைப்புஏற்படுத்தும் எனவும் தெரி வித்துள்ளார்.

# சிறிலங்கா அணியில் ரசல்ஆனல்ட் இணைப்பு

சிறிலங்கா கிரிக்கெட் அணியில் மீண்டும் ரசல் ஆனல்ட் சேர்க்கப்பட்டுள்ளார். அவ்வணி இம்மாதம் சிம்பாப்வேக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள நிலையில் இப்பிரச்சினை எழுந்துள்ளது.

அண்மைக்காலமாக மேற்படி வீரர் உள்ளூர் போட்டிகளில் பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்.

இதையடுத்து அவர் சிம்பாப்வேக்கு செல்லவுள்ள அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் "ஹட்டன் நெஷனல் வங்கி" அணிக்காக விளையாடி தொடர் நாயகன் விருதைப் பெற்றார். பல போட்டிகளில் அரைச்சதத்தைக் குவித்ததுடன் 11விக்கட்டுக்களையும் கைப்பற்றினார். இதனால் அவரை தேசிய அணியில் மீண்டும் இணைத்துக் கொள்ள முடியாகியது.

சிறிலங்கா அணி எதிர்வரும் 20ஆம் திகதி முதலாவது ஒருநாள் போட்டியில் சிம்பாப்வேயை எதிர்த்து புலவோயாவில் விளையாடவுள்ளது.

# 3-வது போட்டியில் கங்குலி பங்கேற்பு

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்புக்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அவ்வணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட காயம் காரணமாக தாயகம் திரும்பிய அவர் இன்று நடைபெறும் 2ஆவது போட்டியில் பங்கேற்க மாட்டார். மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா1-0 என்ற நிலையிலுள்ளது.



# புலிகளுடன் கலந்து பேசிய பின்னரே அரசியல் நகர்வு குறித்து முடிவெடுப்போம்

## -தமிழரசுக்கட்சி செயலர் மாவை சேனாதிராஜா

தமிழீழ விடுதலைப்புலிகளுடைய தலைமையுடன் ஓரிரு நாட்களுக்குள் இத்தேர்தலின் முடிவுகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம் எனவே அதற்குப் பின்னர் தான் தென்னிலங்கை அரசியலில் யார் ஆட்சியமைக்க விரும்புகிறார்களோ அவர்கள் எங்களுடைய ஆதரவு தேவையெனயார் நினைக்கிறார்களோ அவர்கள் எமது உரிமையை நிலைநாட்டுவதற்கு என்ன பதில் கூறப்போகின்றார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் எமது அரசியல் நகர்வுகள் குறித்து முடிவு எடுக்கவுள்ளோம் அல்லது நாங்கள் என்ன உத்தியை கையாள வேண்டு என தீர்மானம் எடுக்கவுள்ளோம் என தெரிவித்தார் தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா. அவர் மேலும் தெரிவிக்கையில்;

இதுவரை தென்னிலங்கையில் தேர்தலில் போட்டியிட்டு அரசு அமைக்கவேண்டுமென விரும்புகின்ற எந்தவோர் கட்சியும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் எவ்வித பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை.

தேர்தல் காலத்தில் நாம் மக்களிடம் தமிழ்தேசிய இனம் தனக்கு ஏற்ற சுயநிர்ணய உரிமை பயன்படுத்துவதற்கு வாக்களிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டோம் நாங்கள் இச்செய்தியை சர்வதேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும் தெளிவாக கூறியுள்ளோம் தொலைக் காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# யாருடன்,எதைப்பற்றி,என்னமுறையில் பேசுவது போன்ற பலவிடயங்களை கருத்தில் கொண்டே முடிவெடுப்போம்

## - இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(லண்டன்)

சமாதான முயற்சிகளை சனாதிபதி முன்னெடுப்பாரென பலர் இதற்கு முன்பும் கூறியுள்ளனர். எமக்கும் இவ் விடயம் சம்பந்தமாக பரவலான அனுபவங்கள் உண்டு. எனவே அவர்களின் கூற்றுக்களின் அடிப்படையில் நாங்கள் முடிவெடுக்கமாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாருடன் பேச வேண்டும்? என்ன பேசவேண்டும்? என்ன முறையில் பேசவேண்டும்? இடைக்கால சுயாட்சி ஏற்படுமா? எப்பொழுது ஏற்படும்? எவ்வளவு விரைவில் ஏற்படும்? என பல விடயங்களை கருத்திற் கொண்டுதான் நாங்கள் ஓர் முடிவெடுக்கலாம். எனவே ஒருவர் பிரச்சாரத்தில் நாங்கள் சமாதான முயற்சியை முன்னெடுப் போம் எனக் கூறி எங்களை இலகுவாக ஏமாற்ற முடியாதென நான்கூற விரும்புகின்றேன். யாரையும் நாங்கள் நிராகரிக்கவும் இல்லை, ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆனால் மிகவும் நிதானமாக அனைத்தையும் பரிசீலித்த பின்னர் எமது முடிவை எடுப்போம்.

எந்தவோர் கூட்டமைப்பிற்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே தேர்தல் முடிவுகளுக்கமைய எந்தக் கூட்டமைப்புக்கும் தனிப்பட்ட முறையில் ஆட்சியமைக்கும் நிலையில் தற்போது இல்லை.

எம்மைப் பொறுத்தவரையில் எமது கொள்கை தேர்தலின் போது வட-கிழக்கு ஓர் இடைக்கால சுயாட்சி அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். அதிகாரங்கள் பெருமளவாக வழங்கப்படவேண்டும், வட-கிழக்கைக் கட்டியெழுப்பவேண்டும்.

இவற்றிற்காக நாங்கள் ஓர் இடைக்கால சுயாட்சி அமைப்பைப் பெறவேண்டும் என மக்களிடம்கேட்டோம். அதற்கமைவாக எமது சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இதேவேளை ஐ.ம.சு.முன்னணி ஆட்சியமைத் தால் அது எமது ஆதரவைக்கோரினால் அதற்கு ஆதரவு அளிப்பது சம்பந்தமாக நாங்கள் இன்னுமோர் முடிவும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக யோசிப்போம். ஆனால, எமது கொள்கையின் அடிப்படையில் தான் நாங்கள் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சுவிஸ்...

ஸ்தாபனத்தின் முன்வால் நடாத்தப்படவுள்ளது.

ஈழத்தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி சுயநிர்ணயம் என்னும் கோட்பாடுகள் வலியுறுத்தப்படவுள்ளன. இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான கரிகாலன் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த பொங்குதமிழ் நிகழ்விற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழர்களால் வாழ்த்துச் செய்திகளும் அனுப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவாநியூகினி நாடுகளில் வாழும் ஈழத்தமிழ் அமைப்புக்களின் ஒன்றியமான தென்துருவத் தமிழர் சம்மேளனம் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய உலகால் உறிஞ்சப்படாது எமது முகங்களையும், முகவரிகளையும், பாதுகாத்து வாழ்வதற்கான போராட்டத்தின் வடிவங்களில் ஒன்றே பொங்குதமிழ்.

வரலாறு என்பது தன்னியக்கம் உடையதல்ல. வரலாற்று மாற்றத்திற்கு தனிமனிதர்களின் குறுக்கீடு அவசியமாகின்றது. ஆற்றல் மிக்க, அருமைமிக்க, தனித்துவம்மிக்க வரலாற்று நாயகன் தமிழ் இனத்தின் வரலாற்றை முன்நின்று நகர்த்துகின்றான். நீங்கள் காணும் பொங்கு தமிழ் அந்த காவியநாயகனின் கரங்களை வலுப்படுத்தும் என நம்புகின்றோம்.

பொங்குதமிழ் இலட்சியம் வெற்றிபெற அதன் வேட்கையை சர்வதேச சமூகம் உள்வாங்கி செயற்பட நீங்கள் எடுக்கும் முயற்சிகள் கைகூட வாழ்த்துகின்றோம் என அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தலில்...

பெரும் செய்தியினைச் சொல்லியுள்ளார்கள். மீண்டும் இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைத் தமிழீழ மக்களின் தேசியத் தலைமையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களின் உண்மையான ஏக பிரதிநிதிகளாகவும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் எந்தவிதமான பேதங்களுமின்றி ஒன்றுபட்டு, ஒற்றுமையாக நிற்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அத்தோடு, தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை ஆகிய தமிழீழத் தேசிய இனத்தின்மூலாதாரக்கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையும் இல்லாது விடின் தமிழீழத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையை நிலைநிறுத்தப் போராடுவோம் என்பதையும் தெளிவாக இடித்துரைத்துள்ளார்கள்.

தமிழீழத் தனியரசை அமைக்குமாறு 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்த பின்னர், தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில்தான் மிகப்பெரிய அளவில் எழுச்சி பெற்று, தமிழ்த் தேசிய உணர்வோடு தமது அபிலாசைகளையும் விருப்பங்களையும் மிகவும் உறுதியாகத் தீர்க்கமான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தவோ அசட்டைசெய்யவோ முடியாதவாறு அதனைத் தூக்கி நிறுத்தியிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழீழ விடுதலைப்புலிகளை ஓர் பலம் மிக்க வலுவான மக்கள் சக்தியாக உலகிற்கு மீளவும் நிரூபித்திருக்கிறார்கள். இது எமது போராட்ட முன்னெடுப்புக்களுக்குக் கிடைத்த மாபெரும் அரசியல் வெற்றி. இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித்தந்த தமிழ் மக்களுக்கு இச்சந்தர்ப்பத்திலே தமிழீழத் தேசியத் தலைவர் சார்பாகவும் எமது அமைப்பின் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு, தமிழ் மக்களது பாதுகாப்பிற்காகவும் சுதந்திர வாழ்விற்காகவும் அயராது போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைத்துவத்தினது அரசியல் போராட்ட முன்னெடுப்புக்களுக்கும் பக்கத்துணையாக இருந்து செயற்படவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தொடர்ந்து உங்கள் நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிச் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### தேறாங்கண்டலில் மினி சூறாவளி

# பாதைக்குக்குறுக்கே மரங்கள் சீர்ப்படுத்தும் பணியில் அரசியல் போராளிகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தின் தேறாங்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் பி.ப.3.45 மணியளவில் வீசிய மினி சூறாவளி காற்றினால் இக் கிராமத்தின் குடிசைகளின் கூரைகள் பயன்தரும் மரங்கள் முறிந்துள்ளன.



இங்கு பலத்த காற்று வீசியதால் கொக்காவில் துணுக்காய் பாதையின் தேறாங்கண்டல் வீதிக்கு அருகில் இருந்த பாரிய மரங்கள் வீதியின் குறுக்கே விழுந்துள்ளன. சம்பவம் அறிந்த துணுக்காய் அரசியல் துறையினர் நேற்றுக் காலை 11 மணியளவில் மக்களின் உதவியுடன் தடைப்பட்ட பாதையினை சீர்ப்படுத்திமக்களின் போக்குவரத்துக்களை செய்வதற்கு உதவியுள்ளனர்.(24)

# சிறுபான்மைக் கட்சிகளுடன் ஐ.ம.சு.முன்னணி பேரம்பேச்சு

105 ஆசனங்களைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வரும் 22ஆம் திகதி கூடவுள்ள பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை உறுதிப்படுத்துவதற்காக சில சிறுபான்மைக் கட்சிகளுடன்பேரம்பேசலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையகத்தில் தொண்டமான், வடக்கில் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து ஆசனங்களைக் கொண்டுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐ.ம.சு.முன்னணிக்கு ஆதரவளிப்பதாயின் ஏற்கனவே ஐ.ம.சு.முன்னணியில் இணைந்து கொண்டுள்ள நூ.ஆக்கு தலைமை தாங்கும் பேரியல் அஷ்ரப்பிற்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை விட அதிக முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். அதாவது முக்கியமான அமைச்சு வழங்கப்படவேண்டும் எனக் கோருவதாகவும் ஆறுமுகம் தொண்டமானும் தனது எதிரியான ஏற்கனவே ஐ.ம.சு. முன்னணியில் இணைந்து கொண்டுள்ள சதாசிவத்திற்கு வழங்கப் படும் முக்கியத்துவத்தைவிட தனக்கு அதிகமான முக்கியத்துவம் அமையப்போகும் அரசாங்கத்தில்வழங்கப்பட வேண்டும் என்றும் தங்கள் தரப்புப் பேரங்களை முன்வைத்துள்ளனர். இவர்களது கோரிக்கைகளை எவ்வாறு திருப்தி செய்வது என்பது குறித்து ஐ.ம.சு.முன்னணியின் தலைவரான சனாதிபதி தீவிரமாக சிந்தித்து வருகிறார் இவர்கள் இருவரது கோரிக்கைகளையும் திருப்தி செய்யாது விட்டால் இவர்களை உள்ளே எடுக்கமுடியாது. கோரிக்கைகளைத் திருப்தி செய்தால் உள்ளே இருக்கும் பேரியல் அஷ்ரப்பும், சதாசிவமும் வெளியேறிவிடவும் வாய்ப்புண்டு. இந்த சிக்கலை எவ்வாறு தீர்த்து ஆட்சியமைப்பது என்பதில் கடும் பிரயத்தனம் கொள்ளவேண்டியநிலையில் சந்திரிகா உள்ளார். இதேவேளை 9 ஆசனங்களைக் கொண்டுள்ள ஜாதிகஹெல உறுமய தாம் எந்தக் கட்சியுடனும் இணைந்து ஆட்சியில் பங்கேற்கப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது.

### ஈ.பி.டி.பி...

பற்றி பொலிசாரிடம் முறைப்பாடு செய்தால் உயிருடன் கொளுத்துவோம் என்றும் கூறி அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள்.

ஊர்காவற்றுறை பொலிசார் அவரைத் தற்போது யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றுள்ளார்கள்.

# சாவு அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை பேரம்பலம்

புலிமச்சிநாதர் குளம் மாங்குளத்தினைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்டசிதம்பரப்பிள்ளை பேரம்பலம் 03.04.2004 அன்று காலமானார். அன்னார் சிதம்பரப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சிவமணியின் அன்புக் கணவரும் விதுசன், கினோசா, விதுரா ஆகியோரின் தந்தையும், குலசேகரம், சண்முகநாதன், திலகநாதன், ரவிச்சந்திரன், தெய்வானை, யோகநாதன், கலைச்செல்வி, பத்மநாதன் (போராளி), சிவநாதன் (மாவீரர்), பாக்கியநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.04 நேற்று கொடிகாமம் இந்து மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(4422)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.